## தலைவர்-முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் அமைதிப் பேரணி!

# 119வது வட்டக் கழகத்தினர் திரளாகப் பங்கேற்பீர்!

### வட்டச் செயலாளர் க.வே.மோகன் வேண்டுகோள்!

சென்னை, ஆக.7-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் 5-ஆம் ஆண்டு நினைவுநாள் அமைதி பேரணியில் திரளாகப் பங்கேற்குமாறு வட்டச் செயலாளர் க.வே. மோகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:-

இன்று (7.8.2023) காலை 7 மணியளவில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5-ஆம் ஆண்டு நினைவு தினத்தையொட்டி தமிழக முதல்வர், கழக தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி அமைதிப் பேரணி, அண்ணாசாலையில் உள்ள முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் சிலை அருகில் இருந்து புறப்பட்டு காமராஜர் சாலையில் உள்ள கலைஞர் நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்துகிறார்.

இதில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, பகுதி செயலாளர் ஏ.ஆர்.பி.எம். காமராஜ், ஆர்.என். துரை, மாமன்ற உறுப்பினர் திருமதி. வே.கமலா செழியன், ரவி ராஜ்குமார், வி.என்.ராஜன், ஆர்.ரஞ்சித்குமார், எல். பாலு ஆகியோர் கலந்து கொள்ள உள்ளதால் இந்த அமைதிப் பேரணி காலை 6 மணியளவில் வி.எம்.தெருவில் உள்ள நமது வட்டக் கழக அலுவலகம் வருமாறு கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக செயல் வீரர்கள் திரளாக கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டச் செயலாளர் க.வே. மோகன் அறிக்கையில் கூறியுள்ளார்.



திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்குட்பட்ட ஆவடி மாநகராட்சி பரிக்கப்பட்டு பசுமை பூங்காவில் பூங்கா பயன்படுத்துவோர் நன்மைக்காக பூங்காவில் உள்ள புதர்கள் மற்றும் குப்பைகளை அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது இதனை முன்னாள் அமைச்சரும் மாவட்ட கழகச் செயலாளருமான ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ பார்வையிட்டு பொதுமக்களின் குறைகளை கேட்டு அறிந்தார் அருகில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆணையர் தர்ப்பகராஜ், மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன் கவுன்சிலர் மீனாட்சி குமார் உள்பட அதிகாரிகள் பலர் உள்ளனர்.

## ஆவடி மாநகராட்சி பசுமை பூங்காவில்

# ஆவடி சா.மு. நாசர் எம்எல்ஏ ஆய்வு செய்தார்!

திருவள்ளூர் ஆகஸ்ட் 07;

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி மாநகராட்சி ஆவடி அருகே பருத்திப்பட்டு பசுமை பூங்கா அமைந்துள்ள இந்த பூங்காவில் நாள்தோறும் ஏராளமான மக்கள் நடைபயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். மேலும், மாலை நேரங்களில் ஏராளமான சிறுவர்சிறுமிகள், அங்குள்ள விளையாட்டு உபகரணங்களில் ஏறி விளையாடி வருகின்றனர். இதற்கிடையே, இந்த பூங்காவில் முட்புதர் காடுகளும், குப்பை கழிவுகளும் நிரம்பியிருந்ததாக கடந்த வாரம் முன்னாள் அமைச்சர் மாவட்டச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் எம்.எல்.ஏ திடீர் ஆய்வு செய்தார் அப்பகுதி பொதுமக்கள் குறைகளை கூறினார்கள் அதனை அதிகாரிகள் சரி செய்து விட்டார்களா என்று நேற்று காலை திடீர் ஆய்வு மேற்கொண்டார்

பருத்திப்பட்டு பசுமை பூங்காவில் பணிகள் நிறைவு அடைந்ததா என்று பார்வையிட்டு பசுமை பூங்காவின் பல்வேறு பகுதிகளை சுற்றி பார்த்தார். பின்னர், அங்குள்ள விளையாட்டு உபகரணங்கள் முறையாக இயங்கும் நிலையில் உள்ளது என்பதையும் ஆய்வு செய்தார். பின்னர், பூங்காவின் சுற்றுப்புற பகுதிகளில் நிறைந்துள்ள முட்பு தர் காடுகளையும், அங்கு குவிந்துள்ள குப்பைக் கழிவுகளையும் அகற்றப்பட்டதையும் உறுதி செய்தார்

பின்னர் அங்கு நடைபயிற்சியில் ஈடுபட்டிருந்த மக்களிடம் குறைகளை கேட்டறிந்தார். உடனடியாக நிவர்த்தி செய்த பணிகளை குறித்து பொதுமக்கள் தமிழ்நாடு முதலமை ச்சருக்கும் மற்றும் முன்னாள் அமைச்சர் ஆவடி சாமு.நாசருக்கும் நன்றி தெரிவித்தார்கள் மேலும் பூங்காவில் மக்களுக்கு பயன்படும் வகையில் பல்வேறு வசதிகளை மேம்படுத்தி தரவேண்டும் என மாநகராட்சி அதிகாரிகளிடம் அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின்போது, ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் தர்ப்பகராஜ், மண்டல குழு தலைவர் ஜி.ராஜேந்திரன், மாநகர பொறுப்பாளர் சண்பிரகாஷ் மாமன்ற உறுப்பினர் மீனாட்சி குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## என்.மருதுகணேஷ் தலைமை ! தா.இளையஅருணா முன்னிலை !

# சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் 1000 ஏழை எளியோருக்கு உணவு !

### ஆர்.எஸ்.பாரதி வழங்குகிறார் ! கலாநிதி வீராசாமி என்.ஆர்.இளங்கோ ஜே.ஜே.எபினேசர் பங்கேற்பு !

சென்னை, ஆக. 7 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் தொடக்கத்தையொட்டி சென்னை வடக்கு மாவட்ட வழக்கறிஞர் அணி சார்பில் தொடர் நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. அவற்றில் 5வது நிகழ்ச்சியாக ஏழை எளியோருக்கு 1000 பேருக்கு உணவு வழங்குதல் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி (08.08.2023 செவ்வாய்க்கிழமை) காலை 11.00 மணியளவில் பழைய வண்ணாரப்பேட்டை தபால் நிலையம் அருகே உள்ள பேரறிஞர் அண்ணா சிலை முன்பு நடைபெறுகிறது.

இதில் என்.மருதுகணேஷ் தலைமை வகிக்கிறார்.ஆர். வீரமணி, டி.சுரேஷ்குமார், கே.பழனியப்பன், ஆகியோர் ஏற்பாட்டில் நடைபெறுகிறது. இதில் மாவட்டச் செயலாளர் தா.இளையஅருணா, ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ, ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். வட்டச் செயலாளர் ச.தமிழ்ச்செல்வன், பகுதி அமைப்பாளர்கள் எஸ்.சேகர், எஸ்.சரவணகுமார், ஆகியோர் வரவேற்கின்றனர். இந்நிகழ்ச்சியில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி சிறப்பு விருந்தினராக பங்கேற்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவ படத்திற்கு மலரஞ்சலி செலுத்தி ஏழைஎளியோருக்கு உணவு மற்றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்பிக்கிறார். இதில் கலாநிதி வீராசாமி எம்.பி, என். ஆர்.இளங்கோ எம்.பி, ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ, ஐடிரீம்ஸ் ஆர்.மூர்த்தி எம்.எல்.ஏ, சூர்யா வெற்றி கொண்டான், இரா.நரேந்திரன், பி.டி.பாண்டிசெல்வம், ஆர்.எம்.டி.ரவீந்திரன், நந்தனம் நம்பிராஜன், நா.மனோகரன், இரா. கருணா, இரா.வெற்றிவீரன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், மூ.கோபி, க.நாகம்மை, டி.தயாளன், இரா.லட்சுமணன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், க.ஜெயராமன், வா. பெ.சுரேஷ், அ.முருகன், இரா.செந்தில்குமார், ந.சண்முகம், எல்.அருளரசன், வே.சிவக்குமார், கி.ராஜே ந்திரன், த.கமலக்கண்ணன், ஏ.தமிழ்ச்செல்வன், பா.மதிவாணன், அமுல், நேதாஜி யு.கணேசன் எம்.சி, வெ.சு. சத்யநாராயணன், ஏ.ரமேஷ் பாபு, ஜி.கோவிந்தசாமி, லயன் தீனதயாளன், டாக்டர் கலைவாணன், லியோ சுரேஷ், விமலா மோகன், லஷ்மி வேலு, பெரம்பூர் சதீஷ், வி.யுவராஜ், கோல்டு பிரகாஷ், எம்.ஆர்.டி.அப்துல் ரகுமான், இரா.பொன்இளவரசன், ப.சோமசுந்தரமூர்த்தி, லயோலா கே.மதன், இ.ரவிக்குமார், வை.கௌதமன், என். அனிபா, ஆர்.டி.ராஜா, கே.பாலு, கே.பி. சதீஷ்குமார், எம்.வேதாலட்சுமி, என்.எம்.கதிரேசன், தா.வ.மு. கஜேந்திரன், நா.கோதண்டன், மா.நாகராஜன், ப.குமார், ச.தமிழ்செல்வன், பொ.து. இராஜா, வீ.வடிவேல், எஸ். எல்.சுந்தர், கே.தேவன், ஆர்.எ.எம்.சசிகுமார், ஜி.ஏழுமலை, ஆர்.ராஜன், மற்றும் பலர் கலந்து கொள்கிறார்கள்.

## முத்தமிழறிஞர் கலைஞர் 5 ஆம் ஆண்டு நினைவு தினம்:

# எழும்பூர் தொகுதியில் 1000 பேருக்கு உணவு!

### இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. வழங்குகிறார்!

சென்னை, ஆக. 7 -

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு எழும்பூர் தொகுதியில் 1000 பேருக்கு உணவினை சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்குகிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு தினத்தை முன்னிட்டு எழும்பூர் வடக்கு பகுதியில் சூளை பெரிய தம்பி தெரு மற்றும் சட்டன்னன் தெரு சந்திப்பில் முன்னாள் வட்டச் செயலாளர் புருஷோத்தம் தலைமையிலும்,

டாக்டர் அழகப்பா சாலை புரசைவாக்கத்தில் புரசை குமார் தலைமையிலும்,

எழும்பூர் தெற்கு பகுதி மெக்னிக்கள்சாலை சேத்துப்பட்டில் முன்னாள் பகுதிக் கழகச் செயலாளர் விஜயகுமார் தலைமையிலும்,

ஆதித்தனார்சாலை புதுப்பேட்டையில் முன்னாள் அவைத் தலைவர் புஷ்பராஜ் தலைமையிலும்,

எழும்பூர் தொகுதியில் உள்ள ஏழை எளியோர்களுக்கு உணவினை சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், அனைத்து அணியினர் கலந்து கொள்கின்றனர்.

## கலைஞர் நினைவு தினம்! எல்.சீனிவாசன் தலைமையில்

# இராயபுரம் 49வது வட்டத்தில் அறுசுவை உணவு!

### தா.இளைய அருணா வழங்குகிறார்! ஐட்ரீம் மூர்த்தி எம்.எல்.ஏ. பங்கேற்பு

சென்னை, ஆக.7-

சென்னை வடக்கு மாவட்டம் இராயபுரம் கிழக்கு பகுதி 49 வட்டக் கழகத்தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 5 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (7-8-2023, திங்கட்கிழமை) காலை 10 மணி அளவில் பாலா அருணாசல தெரு, ஸ்ரீரங்கம்மாள் தெரு சந்திப்பில் வட்டச் செயலாளர் எல்.சீனிவாசன் தலைமையில் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

இதில் இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம்ஸ் ஆர்.மூர்த்தி, இரா. செந்தில் குமார், வே.சிவகுமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சென்னை வடக்கு மாவட்ட செயலாளர் தா.இளைய அருணா பொதுமக்களுக்கு உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் பி.டி. பாண்டி செல்வம், நா.மனோகரன், ஆர்.எம். டி.ரவீந்திரன், மூ.கோபி, கா.நாகம்மை, எல்.அருள் அரசன், நா.சண்முகம், டி. ராஜேந்திரன், கட்பீஸ் பா. சோமசுந்தரமூர்த்தி, லயோலா மதன், கா. கோவிந்தசாமி, எம்.தீனதயாளன், தா. ஜெயபாலன், பி.சேகர், கு.சுந்தர், பி.ஜெயலக்ஷ்மி, லோ.மோகன், கா.கலைச்செல்வன், எம். பழனி, எம்.வி.என்.மணி, எ.குமார், கே.ஆர்.கோபிநாத், ஜி.கோதண்டராமன், சுதாகர், இ.கதிரவன், ஜே.பாஸ்கர், தா.பன்னீர்செல்வம், ஜி.சதீஷ்குமார், ஆர்.வி. கணேஷ், என்.கிருஷ்ணன், கா.கோவிந்தராஜ், பி.கண்ணன், கு.சேகர், ஜே. புருஷோத்தமன், எஸ்.ராஜசேகரன், ஆர்.பாரதிதாசன், ஜி. விநாயகமூர்த்தி, கா. பாலகிருஷ்ணன், எம்.தங்கராஜ், சி.லிங்கேசன், சி.மனோகரன், எம்.மோகன் பாபு, எம்.டி. மதன்ராஜ், மார்க்கெட் வெங்கடேசன், கன்னியப்பன், வி.சின்னசாமி மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்,

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை வட்ட செயலாளர் எல்.சீனிவாசன் செய்துள்ளார்.


